செ.வெ.எண் : 62/ மார்ச் / **2020** நாள் : 20.03.2020

கொரோனா வைரஸ் நோய் பாதித்த நாடுகளிலிருந்து விமானம் மூலம் திருச்சிராப்பள்ளிக்கு வருகை புரிந்த பயணிகளை தனிமை படுத்தும் மருத்துவ முகாம் கள்ளிக்குடியில் அமைக்கப்பட்டுள்ளதையும், மணப்பாறை மருத்துவமனை, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகிய இடங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.03.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

-------------

மேலும் இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்து தெரிவித்ததாவது:

வெளிநாடுகளிலிருந்து விமானம் மூலம் திருச்சிராப்பள்ளிக்கு வருகை புரிந்த பயணிகளை தனிமைப்படுத்தி மருத்துவக்குழுவினர் கண்காணித்து வருகின்றனர். அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஏற்கனவே 40 படுக்கை மெத்தைகள் உள்ளது. தற்போது கூடுதலாக 12 படுக்கை மெத்தைகள் தயார் செய்யப்பட்டு வருகிறது. இத்துடன் சேர்த்து 52 படுக்கை மெத்தைகள் உள்ளது.

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 07 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள 26 பயணிகள் மருத்துவ முகாமில் தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை 8 நபர்களுக்கு கொரோனா வைரஸ் நோய் தாக்கம் இல்லை என மருத்துவ அறிக்கை வரப்பெற்றுள்ளது. மேலும் நமது மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தாக்கம் யாருக்கும் இல்லை. கொரோனா வைரஸ் நோய் தொடர்பாக 1077 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். பொது மக்கள் அதிகமாக மக்கள் கூடும் இடங்களுக்கு செல்ல வேண்டாம்.

கொரோனா வைரஸ் நோய் தொடர்பான வதந்திகளை அதிக அளவில் சமூக வலைதளத்தில் பரப்புகின்றனர். தவறான வதந்தியை பரப்புவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் தவறான செய்திகளை வதந்திகளாக மற்றவர்களுக்கு பரப்புவது(**Forward**) குற்றமாகும். என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மத்திய அரசு அறிவுரையின்படி, கொரோனா நோய் பரவலை தடுக்கும் பொருட்டு 19.03.2020 அன்று இரவு சார்ஜா, துபாய், சிங்கப்பூரில் இருந்து வருகை புரிந்த 4 விமானங்களில் 427 பயணிகள் பரிசோதனை செய்யப்பட்டதில் மொத்தம் 26 பயணிகளில் ஆண்கள் 24, பெண்கள் 2, தனிமைப்படுத்துவதற்காக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. கள்ளிக்குடி தனிமைப்படுத்துதல் முகாமிற்கு அரசு ஏற்பாடு செய்த வாகனம் மூலமாக அதிகாலை 3.30 மணியளவில் வருவாய்த்துறை, காவல்துறை, மருத்துவதுறையின் மூலமாக உரிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேலும் அவர்களுக்கு தனிமைப்படுத்தும் முகாமில் உள்ள மருத்துவர் மூலமாக மீண்டும் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு அவர்களுக்கு என பிரத்யோக அறைகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பயணிகள் அனைவரும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து வருகை புரிந்த சிறப்பு மருத்துவக்குழு மூலம் பரிசோதனை செய்யப்பட்டு அனைவரும் நலமுடன் உள்ளனர் என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

நேற்று அனுமதிக்கப்பட்ட 28 பயணிகளுக்கு எவ்வித அறிகுறி இல்லை என்பதால் வீட்டில் தனிமை படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டு மையித்திலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

இப்பயணிகள் அனைவரும் இன்று இரவு தனிமைப்படுத்தும் முகாமிலிருந்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். மேலும், இவர்கள் தங்கள் வீடுகளில் தனிமையில் இருக்க வேண்டும் என்றும், சளி, இருமல், தும்மல், காய்ச்சல் இருந்தால் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்று கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து இவர்கள் மருத்துவக்குழுவினரால் கண்காணிக்கப்பட உள்ளனர்.

இந்நிகழ்சியில் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர்.வனிதா, மருத்துவமனை மருந்து கண்காணிப்பாளர் திரு.இரா.ஏகாம்பரம் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.